

# ஆர்ப்பாட்டம் தொடர்பிலான ஆய்வு

## சாராம்ச அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
சோஷல் இன்டிகேட்டர்
செப்டெம்பர் 2022

# அறிமுகம்

இந்த அறிக்கையானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் (மக்கள் போராட்டம்) தொடர்பில் நடாத்தப்பட்ட ஆய்வு முடிவுகளின் சாராம்சத்தினை முன்வைக்கின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து, எரிபொருள், சமையல் எரிவாயு போன்றவற்றின் பற்றாக்குறையுடன் பரந்தளவில் பொதுமக்கள் அனுபவித்த துன்பத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இராஜினாமா செய்யக் கோரியும், இலங்கை அரசியலில் ராஜபக்ஷ குடும்பத்தினரை விலகக்கோரியும், அப்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலஞ்சம், ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் என்பவற்றைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் இவற்றிற்கு பொறுப்புக்கூறும் படி அதிகாரத்தில் இருப்பவர்களிடம் கோரினார்கள். ஆர்ப்பாட்டம் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜூலை 09ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறியதுடன் ஜூலை 14ஆம் திகதி தனது இராஜினாமாவை சமர்ப்பித்தார். ஜூலை 20ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தினால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். புதிய ஜனாதிபதியான விக்கிரமசிங்க பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸாரைப் பயன்படுத்தி அச்சுறுத்துவதன் மூலம் நாட்டில் அரசியல் தரப்புகளுக்கு எதிராக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களை ஒடுக்கினார். அரசின் இந்த அடக்குமுறை பின்னணியில், மக்கள் போராட்டங்களில் பொதுமக்களின் பங்குபற்றல் படிப்படியாகக் குறைவடைந்தது. இந்நிலையில், எதிர்ப்புகள் குறைவடைந்திருந்தாலும், ஊழல் மிகுந்த அரசியல் தரப்புகளுக்கு எதிராகவும் மற்றும் குறிப்பாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவிற்கு எதிராகவும் எதிர்ப்புக்கள் தொடர்ந்தன. ஆர்ப்பாரட்டக்காரர்களுக்கமைய ஜனாதிபதி விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்க எந்தவிதமான மக்கள் ஆணையும் இல்லை என்ற கருத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் உறுதியாக இருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் ஆர்ப்பாட்ட முன்னெடுப்புக்கள் தொடர்பான மக்களின் அபிப்பிராயம் மற்றும் அணுகுமுறை பற்றி புரிந்துகொள்வதற்காக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்காய்வுப் பிரிவான சோஷல் இண்டிகேட்டர் நாட்டின் 25 மாவட்டங்களிலும் வசிக்கின்ற எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 1000 ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் ஒரு கணக்கெடுப்பு ஆய்வை நடாத்தியது.

இந்த கணக்கெடுப்பு ஆய்வானது கலாநிதி பிரதீப் பீரிஸ், மா. கிருஷ்ணமூர்த்தி, முதிதா பத்திரன மற்றும் இஷாரா ஜயரத்ன ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வை நடாத்த ஆதரவளித்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் பவானி பொன்சேகாவுக்கும் மற்றும் இந்த கணக்கெடுப்புக்கு நிதியளித்த நீதி உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்முயற்சிக்கும் (Global Initiative for Justice Truth and Reconciliation - GIJTR) சோஷல் இண்டிகேட்டர் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. அட்டைப்பட உதவி செல்வராஜா ராஜசேகர், ஆசிரியர் ‘மாற்றம்’ இணையதளம் (https://maatram.org)

# முறைமையியல்

ஆர்ப்பாட்டம் தொடர்பான ஆய்வானது, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) சேர்ந்த 1000 பதிலளிப்பவர்களைக் கொண்ட மாதிரியுடன் மேற்கொள்ளப்பட்டது. மாதிரியானது நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நகர மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டது. மேலும் பதிலளிப்பவர்கள் எழுமாற்று மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெளிக்கள ஆய்வானது 2022 செப்டம்பர் 22ஆம் முதல் அக்டோபர் 10ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது. சனத்தொகையின் உண்மையான மாவட்ட மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பானது மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பானது பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# ஆய்வு முடிவுகளின் சாராம்சம்

## வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு தொடர்பான அபிப்பிராயம்

- அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டும் என்று பொதுமக்கள் நினைக்கும் துறைகளைத் தரவரிசைப்படுத்துமாறு கேட்டபோது, 30% ஆனவர்களின் இலங்கையர்களில் முதலாவது தெரிவு விவசாயத் துறை ஆகும். 29% ஆனவர்களின் முதலாவது தெரிவாக கல்வித் துறையை தரவரிசைப்படுத்தகின்ற அதேவேளை, 18% ஆனவர்கள் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான நிவாரணத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.
- பெரும்பான்மையாக இளைஞர் யுவதிகள் (18-29 வயது) கல்வித் துறையை முதல் தெரிவாக தரவரிசைப்படுத்துகின்ற போது, முப்பது மற்றும் முப்பதிற்கு மேற்பட்ட வயது வரம்பில் உள்ளவர்கள் விவசாயத் துறையை தமது முதல் தெரிவாக தரவரிசைப்படுத்துகின்றார்கள்.
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், ஒப்பீட்டளவில், அதிகளவான பிரதேச சபை மக்கள் (33%) விவசாயத் துறையை முதல் தெரிவாக தரவரிசைப்படுத்துகின்றார்கள்.

## வருமானம் மற்றும் செலவு

- குறிப்பிட்டளவு பெரும்பான்மையான இலங்கையர்கள் (81%) அவர்களின் வருமானம் அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய போதுமானதாக இல்லை என்றும், அவர்களுக்கு கஷ்டங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். அவர்களில் 46% இனர் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.
- மாநகரசபை பிரதேசத்திற்கு வெளியே வசிக்கும் மக்களே பெருமளவான கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

## நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்புவது தொடர்பான அபிப்பிராயம்

- ஆய்வின் முடிவுகளின்படி, நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்புவது குறித்து பெரும்பான்மையான இலங்கையர்கள் நம்பிக்கையின்மையைக் கொண்டுள்ளனர். கனிசமான சதவிகிதத்தினர் (63%) நாட்டின் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்று தெரிவிக்கும் அதேவேளை, 20% இனர் உறுதியாகத் தெரியவில்லை எனும் கருத்தையும் தெரிவிக்கின்றனர். இந்த அபிப்பிராயம் பிரதேச மற்றும் வயது அடிப்படையில் வேறுபடவில்லை

## ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கிய/ பங்கேற்ற இளைஞர் யுவதிகள் தொடர்பான அபிப்பிராயம்

- ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கிய/ பங்கேற்ற இளைஞர் யுவதிகள் மற்றும் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயம் பற்றி அந்த ஆய்வில் ஆராயப்பட்டது. அவை தொடர்பில் பெரும்பான்மையான இலங்கையர்கள் சாதகமான அபிப்பிராயங்களை பகிர்ந்துகொள்வதாகவும் அவர்கள் தொடர்பில் விமர்சனங்கள் குறைவாக இருப்பதாகவும் ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.
- இலங்கையர்களில் 82% இனர், ஆர்ப்பாட்டமானது சமூகம்/ குடியுரிமை தொடர்பான அக்கறை கொண்ட இளைஞர் யுவதிகளால் நாட்டை சிறந்த ஜனநாயக நாடாக மாற்றி அமைக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டதாக நம்புகின்றனர். சமமான சதவிகிதத்தினர் நாட்டின் சிறந்த எதிர்காலம் தொடர்பிலான ஒரு பொது நோக்கத்திற்காகவே இளைஞர் யுவதிகள் ஆர்ப்பாட்டம் செய்ததாக தெரிவிக்கின்றனர்.
- ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய/ பங்கேற்ற இளைஞர் யுவதிகள் தொடர்பிலான அபிப்பிராயமானது 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் அபிப்பிராயத்துடன் ஒப்பிடும்போது, இளைஞர் யுவதிகளின் (18-29 வயது) அபிப்பிராயமானது சாதகமானதாக உள்ளது.
- ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இளைஞர் யுவதிகள் பற்றிய சாதகமான அபிப்பிராயமானது அனைத்து பிரதேச மட்டத்திலும் பரவலாகக் காணப்படுகின்றது.

## ஆர்ப்பாட்டம் தொடர்பிலான அணுகுமுறை

- பெரும்பான்மையான இலங்கையர்கள் (82%) ஆர்ப்பாட்டமானது நாட்டிற்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியதாக நம்புகின்ற அதேசமயம் அதே அளவான சதவீதத்தினர் (81%) ஆர்ப்பாட்டமானது அந்த சந்தர்ப்பத்தில் தேவை என்று நம்புகின்றனர். 60% இனர் ஆர்பாட்டக்காரர்கள் சட்டத்தை மீறியிருந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.
- ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது, இளைஞர் யுவதிகள் (18-29 வயது) ஆர்ப்பாட்டம் மற்றும் அதை வழிநடத்திய இளைஞர்கள் யுவதிகள் தொடர்பில் சாதகமான அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றனர். பிரதேச அடிப்படையில் நோக்கும் போது, நகரசபை பகுதிகளில் வாழும் மக்களிடையே ஆர்ப்பாட்டத்திற்கான ஆதரவு அதிகமாக இருப்பது தெரியவருகிறது.

## நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பிலான சாதகமான மாற்றம் (சிஸ்டம் சேன்ஜ்) பற்றிய அபிப்பிராயம்

- இலங்கையர்களில் கணிசமான பெரும்பான்மையினர் (83%) நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பிலான மாற்றத்திற்கு தங்களின் ஆதரவை தெரிவிக்கின்றனர். இந்த உணர்வானது பிரதேசம் அல்லது வயது அடிப்படையில் வேறுபடவில்லை.

## நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பான மாற்றத்திற்காக (சிஸ்டம் சேன்ஜ்) அர்ப்பணிப்புகள் செய்வதற்கான விருப்பம்

- நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பான மாற்றத்திற்காக அர்ப்பணிப்புகள் செய்துகொள்ள சம்மதிக்கிறார்களா இல்லையா என்பதைக் குறிப்பிடும்படி பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது. ஆய்வு முடிவுகளின்படி, நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பான மாற்றத்திற்கான அர்ப்பணிப்புகள் கடுமையானதாகின்ற போது பொதுமக்களின் ஆதரவு குறைகின்றது. கணிசமான சதவீதத்தினர் (76%) தமது வழக்கமான பயணம் அல்லது போக்குவரத்துகளில் அர்ப்பணிப்புகளை செய்ய நேரிட்டாலும் நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பான மாற்றத்தை ஆதரிக்க ஒப்புக்கொள்கிறார்கள். 70% இனர் நாடு ஆளப்படுகின்ற விதம் தொடர்பிலான மாற்றத்திற்காக தாங்கள் வழக்கமாக வாங்கும் உணவுப் பொருட்களில் அர்ப்பணிப்புகளை செய்வோம் என்று தெரிவிக்கின்றனர். இந்த ஆதரவானது அதிக வரி செலுத்தவேண்டி ஏற்படும் பட்சத்தில் பெருமளவு குறைகிறது (40%). தமது அல்லது தமது குடும்ப உறுப்பினர் எவரேனும் தொழிலை இழக்க நேரிட்டாலும் மாற்றத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் நான்கில் ஒரு பகுதி (26%) இலங்கையர்கள் மட்டுமே. பதிலளித்தவரின் வயதுக்கு ஏற்ப இந்த அணுகுமுறையில் மாற்றமில்லை. இருப்பினும், இந்த அர்ப்பணிப்புகள் குறித்து பிரதேச மட்டத்தில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

## தனியார்மயமாக்கல் தொடர்பிலான அபிப்பிராயம்

- இந்த ஆய்வில் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டு மிக முக்கியமான துறைகளானது தனியார் மயமாக்கப்படுதல் குறித்து பொது மக்களின் அபிப்பிராயம் பற்றி ஆராயப்பட்டது. ஆய்வு முடிவுகளின் படி, இலங்கையர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இந்த இரண்டு துறைகளையும் தனியார்மயமாக்கும் முன்மொழிவுக்கு எதிராக உள்ளனர். எவ்வாறாயினும், கல்வித் துறையும் சுகாதாரத் துறையும் தனியார்மயமாக்கப்பட வேண்டும் என்பதை இலங்கையில் நான்கில் ஒரு பகுதியினர் ஏற்றுக்கொள்கின்றனர். இந்த உணர்வானது எல்லா பிரதேச மற்றும் வயது மட்டங்களிலும் பரவியிருந்தாலும், இளைஞர் யுவதிகள் மத்தியில் தனியார்மயமாக்கலுக்கு சற்று அதிகமான ஆதரவு உள்ளது.

## ஜனநாயக ஆட்சி தொடர்பான அபிப்பிராயம்

- கணிசமான பெரும்பான்மையினர் (79%), வேறு எந்த வகையான ஆட்சியையும் விட ஜனநாயகமானது விரும்பத்தக்கது என்று தெரிவிக்கின்றனர். இந்த அபிப்பிராயமானது வயது அடிப்படையில் வேறுபடவில்லை.

## அதிகாரப் பகிர்வு தொடர்பான அபிப்பிராயம்

- ஆய்வின் முடிவுகளின்படி, மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறைக்கும் அதேவேளையில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என 39% இலங்கையர்கள் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், சில அதிகாரங்களை பரவலாக்குவது பரவாயில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறைக்கப்படக்கூடாது என்ற கருத்தை 30% இலங்கையர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். குறிப்பிடத்தக்க வகையில், பெரும்பாலும் முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் (42%) மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதுடன், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர்.

## இனங்களுக்கிடையிலான உறவுகள்

- ஒவ்வொரு குடிமகனினதும் சமத்துவ உரிமையைப் பேணுவதற்கு எந்த மதத்திற்கும் முதன்மையான இடம் வழங்கப்படக்கூடாது என்று இலங்கையர்களில் 54% இனர் தெரிவிக்கின்றனர். 30 வருட கால யுத்தத்தின் விளைவாக இறந்தவர்களை நினைவுகூர அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று 45% இனர் தெரிவிக்கின்றனர். சற்று அதிக சதவீதமான இளைஞர் யுவதிகள் எந்த மதத்திற்கும் முதன்மையான இடம் வழங்கப்படக்கூடாது என்றும் 30 வருட கால யுத்தத்தின் விளைவாக இறந்தவர்களை நினைவுகூருவதற்கு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும் நம்புகின்றனர்.

## ஆட்சி முறைகள் தொடர்பான அபிப்பிராயம்

- பதிலளித்தவர்களுக்கு, ஒரு நாட்டை ஆளக்கூடிய பல்வேறு முறைகள் வழங்கப்பட்டு அவர்கள் எந்த வகையான ஆட்சி முறைகளை ஆதரிக்கின்றார்கள் என்று ஆராயப்பட்டது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களால் நாடு ஆளப்பட வேண்டும் என்ற கருத்தை பெரும்பான்மையான இலங்கையர்கள் (89%) கொண்டுள்ளனர். நாடு தொடர்பிலான அனைத்து பிரதானமான முடிவுகளையும் மதத் தலைவர்கள் எடுத்தல் மற்றும் இராணுவம் நாட்டை ஆளுதல் ஆகிய இரண்டு ஆட்சி முறைகளும் மிகவும் குறைந்த அளவு ஆதரவு உள்ள ஆட்சி முறைகள் ஆகும். இந்த உணர்வு அமைப்பானது இரு வயது பிரிவினரிடையேயும் (30 வயதுக்கு மேல் மற்றும் கீழ்) காணப்படுகின்றது.

## தாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் மீதான அணுகுமுறை

- வெளிநாட்டு நிறுவனங்களை நாட்டில் முதலீடு செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று 60% மக்கள் கருதுவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. 63% இனர் ஒரு நபரின் வருமானம் ஈட்டும் திறனை அரசாங்கம் கட்டுப்படுத்தக்கூடாது என்று கூறுவதுடன், 52% இனர் நாட்டின் அபிவிருத்திக்காக அரசு நிறுவனங்களை தனியார்மயமாக்கக்கூடாது என்று கருத்து தெரிவிக்கின்றனர். வெளிநாட்டு நிறுவனங்களை எமது நாட்டில் முதலீடு செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்ற கருத்திற்கு ஆதரவாக இருப்பவர்கள் - பெரும்பாலும் இளைஞர் யுவதிகள் (65%) ஆகும்.

## நலன்புரி கொள்கைகள் தொடர்பான அபிப்பிராயம்

- நலன்புரிக் கொள்கைகள் தொடர்பான கேள்விக்கு மக்கள் வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். பெரும்பான்மையானவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைப்பை ஆதரிக்கின்ற (51%) அதே வேளை, அரசாங்கம் தமது மக்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்று, நலன்புரித் திட்டங்களுக்கு செலவிட வேண்டும் (49%) என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும், இலங்கையர்களில் அரைவாசி அளவினர் தொழில் தேடிக்கொள்ளுதல் தனிநபரின் பொறுப்பு என்று கூறுகின்றனர்.
- அரசாங்க உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்று நம்புபவர்களில் பெரும்பான்மையானவர்கள் (53%) இளைஞர் யுவதிகள் ஆகும். மாறாக, முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களில் 52% இனர் மக்களைக் கவனித்துக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற கருத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர். இரு வயது மட்டடத்தை சேர்ந்தவர்களில், கிட்டத்தட்ட 50% இனர் தொழில் தேடிக்கொள்ளுதல் தனிநபரின் பொறுப்பு என்று நம்புகின்றனர்.

நீதி உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான உலகளாவிய முன்முயற்சி (Global Initiative for Justice Truth and (GIJTR) உளவியல் - சமூக ஆதரவு மற்றும் ஆவணப்படுத்தல் முதல் தடயவியல் மற்றும் சட்டம் வரை பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஒன்பது உலகளாவிய அமைப்புகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், ஆர்வலர்கள் மற்றும் பயிற்சியாளர்களை ஒன்றிணைக்கிறது. நியாயமான மற்றும் அமைதியான எதிர்காலத்தை உருவாக்குவதில் சமூகங்களுக்கு ஒன்றாக அல்லது மோதலில் இருந்து வெளிப்படும் சமூகங்களுக்கு அவை உதவுகின்றன.

GIJTR
Global Initiative for Justice,
Truth & Reconciliation

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94(11)2081384-6
இணையதளம்: http://www.cpalanka.org
பே(f)ஸ்புக்: https://www.facebook.com/CPASL/
டுவிட்டர்: https://twitter.com/CPASL

CPA
Centre for Policy Alternatives

25 YEARS 1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES

சோசூல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோசூல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112 826 010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: krishna@cpasocialindicator.org

Making Social Research Count